# திண்டுக்கல் மாநகராட்சி
# 05.06.2026 அன்று நடைபெற்ற சிறப்பு கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விபரங்கள்

**1)** திடக்கழிவு மேலாண்மை விதிகள்-**2026** **01.04.2026** முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளால் விதிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு மாண்பமை உச்சநீதிமன்றம் வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. மேற்கண்ட வழிகாட்டுதலில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் **2026** தொடர்பான உத்திரவுகளை தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாண்புமிகு மேயர் மற்றும் துணை மேயர் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் வார்டுகள் அளவில் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே நான்கு வகைகளாக (ஈரக்கழிவு, உலர் கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்பு கவனக்கழிவு) தரம் பிரிக்கும் பணியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பங்கேற்க செய்தல், கண்காணிப்பு மற்றும் குறைதீர்ப்பு ஆகியவற்றிற்கு ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்திட மாநகர அளவில் மாண்புமிகு மேயர் தலைமையில் மாநகராட்சி முதல் நிலை அலுவலர்கள் தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கள் மற்றும் பரப்புரையாளர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை குழு அமைத்திடவும் வார்டுகள் அளவில் அந்தந்த மாமன்ற உறுப்பினர்கள் தலைமையில் மாநகராட்சி பகுதி அலுவலர்கள் பரப்புரையாளர்கள், தொண்டு நிறுவனம் மற்றும் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் ஆகியோர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை குழு அமைத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு ஜூன்-**5**ம் தேதியன்று சிறப்பு மாமன்ற கூட்டம் நடத்திடவும், கீழ்கண்டவாறு விழிப்புணர்வு ஏற்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. திடக்கழிவு மேலாண்மை விதிகள் -**2026** விதிகள் மற்றும் உச்சநீதி மன்ற வழிகாட்டுதல்கள்.
2. திடக்கழிவுகளை ஈரக்கழிவுகள், உலர் கழிவுகள், சுகாதாரக்கழிவுகள் மற்றும் சிறப்பு கவனக் கழிவுகள் என நான்கு வகைகளாக உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல்.
3. திடக்கழிவு மேலாண்மை விதிகள்-**2026** குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்து வார்களிலும் நடத்திட நடவடிக்கை எடுத்தல்.

**4.** தூய்மை இந்தியா திட்டம் **2.0**ன்படி மாநகர் முழுவதும் தூய்மையாக பராமரித்தல், குப்பைகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல், செயலாக்கம் செய்தல், பழைய கழிவுகளை சீரமைத்தல்.

எனவே, திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் மாநகர மற்றும் வார்டுகள் அளவில் திடக்கழிவு மேலாண்மை குழு அமைத்து திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(**ந.க.எண்.**4666/2026/**எச்**2)**

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்**.**

**தீர்மானம் எண்.2045** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**ஒம்/இளமதி**,
**மாண்புமிகு மேயர்**,
**திண்டுக்கல் மாநகராட்சி**

---

**// உண்மைநகல் //**

**ஆணையர்**
**திண்டுக்கல் மாநகராட்சி**.